**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.29**
**Defence**
**Court**

**Name : ஆசிக்கான்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.01.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் கடையத்தெருவில் குடியிருக்கிறேன். 2007 ம் ஆண்டு கன்னிமாரம்மன் தெருவில் டெய்லர் கடை வைத்திருந்தேன். நஷ்டமாகிவிட்டதால் கேரளாவிற்கு போய்விட்டேன். நான் 14.08.2007 நடந்த சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். சம்பவம் பற்றி போலீசர் என்னிடம்

எதையும் கேட்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை தெரியாது.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை 2007 ம் வருடம் அக்டோபர் மாதம் போலீசார் விசாரித்தனர் என்றும் அப்போது நான் கன்னிமாரம்மன் தெருவில் சிவா மருத்துவமனை செல்லும் வழியில் டெய்லர் கடை நடத்துவதாக கூறியிருக்கிறேன் என்றால் போலீசாரிடம் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் 14.08.2007 அன்று காலை 10.00 மணியளவில சிவா மருத்துவமனைக்கு செல்லும் சந்துபக்கம் சக்தி என்பவர் காரை நிறுத்தினார் என்றும் காரில் இருந்த செந்தில், சுப்பிரமணியன், சுரேந்திரன், கபிலன் ஆகியோர் இறங்கினார்கள் என்றும் அவர்கள் அடிக்கடி கையில் இருந்த வாட்ச்சை பார்த்து பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது சுரேந்திரன் கார் டிக்கியை திறந்தார் என்றும் நான் கார் டிக்கியை பார்த்தபோது உள்ளே 5, 6 அரிவாள்கள் கிடந்தது என்றும் பின்னர் 5 நிமிடம் கழித்து அனைவரும் பரபரப்பாக காரில் ஏறி வடக்கு நோக்கி போனார்கள் என்றும் அதன் பின்னர் தான் அரைமணிநேரத்திற்குள்ளாக கொலை நடந்ததாக மக்கள் அங்கும் இங்கும் மக்கள் தலைதெறிக்க ஓடினார்கள் என்றும் நானும் என் கடையின் அருகில் இருந்தவர்களும் கடையை அடைத்துவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டோம் என்றும் கூறினேன் என்றால் சரியல்ல. 14.08.2007 ம் தேதி கூலக்கடை பஜாரில் 6 நபர்கள் இறந்தார்கள் என்றும் அதை கேள்விப்பட்டேன். நான்

கடையதெருவில் குடியிருக்கிறேன். என் குடும்பம் மட்டும் தான் தென்காசியில் உள்ளது நான் கேரளாவில் வியாபாரம் செய்து வருகிறேன். அதனால் எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**